வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 400/2020

வழக்குசாட்சி LW9/PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி, F5 சூளைமேடு காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | சங்கரலிங்கம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 41 |

தேதி 08.04.2026

எதிரி ஆஜர். எதிரி தனக்கான தனது வழக்கினை நடத்தும் தரப்பினராவார்.

சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது F5 சூளைமேடு காவல் நிலைய சட்டம் ஒழுங்கு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.06.2013ம் தேதி நான் எம்3 புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது ரெட்டேரி குமரன் மருத்துவமனையில் இருந்து வந்த தகவலைப் பெற்று அங்கு ICU வார்டில் சிகிச்சையில் இருந்த வாதி குழந்தைசாமி என்பவரது வாக்குமூலத்தையும், AR copy 3611யையும் பெற்று நிலையம் வந்து காலை 08.15 மணிக்கு நிலைய குற்ற எண். 931/2013 சட்டப்பிரிவுகள் 294(b), 341, 324 IPC கீழ் வழக்கு பதிவுச் செய்தேன். முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பரிமளா மற்றும் சுதா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா. 5,6 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் சம்பவயிட சாட்சிகள் குழந்தைசாமி, ஜான் ஹென்றி, மங்கல லட்சுமி, மாதவி, பரிமளா மற்றும் சுதா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுச் செய்தேன். இவ்வழக்கின் எதிரியை எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 10.06.2013ம் தேதி அன்றே 15 மணிக்கு புழல் சைக்கிள் ஷாப் பஸ் ஸ்டாப் அருகே வைத்து கைதுக்காக காரணத்தைக்கூறி கைதுச் செய்து எதிரி இன்பகுமார் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ராஜசேகர், மற்றும் சங்கர் ஆகியோர் முன்னிலையில் பதிவுச் செய்தேன்.

எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அவர் கூறிய புழல் லிங்கம் தெருவில் அவரை அழைத்துச் சென்று சாலை ஓரத்தில் மறைவாக கிடந்த சுமார் 2 அடி நீளமுள்ள இரும்பு ராடு ஒன்றை எதிரி எடுத்து ஆஜர் செய்ய அதே சாட்சிகள் ராஜசேகர் மற்றும் சங்கர் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான " என்னை தாங்கள் அழைத்துச் சென்றால் சம்பவ இடத்தை காட்டி இரும்பு ராடை எடுத்து ஆஜர் செய்கிறேன்" என்ற பகுதி அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

பின்னர் இவ்வழக்கில் காயமடைந்த புகார்தார்ருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஆறுமுக சாமி என்பவரை 02.07.2013 ம் தேதி விசாரணைச் செய்து காயச்சான்றினைப் பெற்று அவரது வாக்குமூலத்தை பதிவுச் செய்தேன். விபத்து பதிவேடு புகார் வாக்குமூலம் பதிவுச் செய்த போதே மேற்படி மருத்துவரிடம் பெற்றுக்கொண்டேன். பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து

எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 341, 324 IPC கீழ் குற்ற இறுதி அறிக்கையானது பதிவுச் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தனக்கான தனது வழக்கினை நடத்தும் தரப்பினராவார்)**

நான் ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவன் என்ற விசயம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாங்கள் முதல் விசாரணையில் கூறியிருப்பது போல் நான் தன்னிச்சையான அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலத்தை அளித்தேன் என்று பொய்சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. அ.த.சா. 1 ஆனது ஒரு கும்பல் அளித்த புகார் என்றாலும் அதன் மீது வழக்கு பதிவுச் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது தனி நபர் அளித்த புகார் வாக்குமூலம் ஆகும்.

புகாருக்கு அனுசரனையாக தான் விபத்து பதிவேடு உள்ளதா என்றால் உள்ளது. விபத்து பதிவேட்டில் தெரிந்த நபரால் புகார்தாரர் இல்லத்தில் இரும்பு ராடால் தாக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் உள்ளது சரிதானா என்றால் விபத்து பதிவேட்டில் வீட்டின் உள்ளே தாக்கப்பட்டதாக உள்ளது. எங்களிடம் அளித்த புகாரில் வெளியே சாலையில் தாக்கியதாகவே கூறியுள்ளார். பொய்யான புகாரினைப் பெற்று வழக்கினை பதிவுச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குழந்தைசாமி, ஜான் ஹென்றி, மங்கள லட்சுமியை தவிர வேறு யாரையும் நீதிமன்றத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் அரசு வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் அளித்த புகாரில் எதிரிகள் மீது வழக்கு பதிவுச் செய்யவில்லை என்றால் புகார் எதுவும் பெறப்படவில்லை.

ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த என்னை இழிவுப்படுத்த வேண்டும் என்பதற்காக 6 நபர்கள் கொடுத்த பொய்யான புகாரினை ஏற்றுக் கொண்டது என்பது தீண்டமாமைக்கு இலக்காகும் என்றால்

சரியல்ல. எனது மனைவி ஆதி திராவிடர் வகுப்பினை சேர்ந்தவர் ஆவார். நான் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் ஆவேன்.

மறுவிசாரணை இல்லை.